## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 15.05.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

### மன்றப் பொருள்

**1)** மேட்டூர் நகரில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.1247.19 இலட்சத்திற்கு அரசாணை எண்.2(D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.07.2009–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு நகராட்சி வசம் 2016–ல் ஒப்படைக்கப்பட்டது.

மேட்டூர் நகராட்சியில் 16749 எண்ணிக்கையிலான சொத்துவரி இனங்கள் உள்ளன. அவற்றில் 12501 எண்ணிக்கையில் குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 7776 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி மேட்டூர் நகராட்சி எல்லைக்குள் அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்க வேண்டி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே 7000 எண்ணிக்கையிலான குடிநீர் வீட்டு இணைப்புகளை பகிர்மானக் குழாயில் இருந்து வீட்டின் உட்புறத்தில் குழாய் இணைப்பு வழங்க வேண்டி பணிகளை மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.232.00 இலட்சம் ஆகும். இத்தொகையினை ஈடு செய்ய இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் இம்மதிப்பீட்டுத் தொகைக்கான செலவினத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடன் பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும், மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணையினை அனுப்பி நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.686/2018/ அ5)**

**தீர்மான எண். 72 நாள் 15.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**2)** மேட்டூர் நகராட்சி வார்டு B, பிளாக் எண்.2, நகரளவு எண்.2 உள்ள உரக்கிடங்கில் நகராட்சி பகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலிருந்தும் கடந்த 20 வருடங்களாக சேகரிக்கும் குப்பைகளை Techometric மூலம் அளவீடு செய்யப்பட்ட குப்பைகள் 49823 Cum கொண்டதாகும். மேற்கண்ட குப்பைகளை Bio Mining செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.338.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினைசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.338.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி

வேண்டியும், இந்நகராட்சி நிதி நிலைமை பற்றாக்குறையாக உள்ளதால் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு பெறவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2501/2018 /இ1)**

**தீர்மான எண். 73 நாள் 15.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**3)** மேட்டூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் Decentralised Micro Compost Centre மூன்று இடங்களில் அமைப்பதற்கும் வாகனங்கள் வாங்குவதற்கும் Swachh Bharat Mission Integrated Solid Waste Mangagement Scheme 2018-19 திட்டத்தில் ரூ. **244.60** இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணையினை அனுப்பி நிர்வாக அனுமதி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றினை பெறவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணி விபரம்** | **மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) (including GST)** |
|---|---|---|
| 1 | Construction of the Micro Compost Centre,at Salem camp | 58.12 |
| 2 | Construction of the Micro Compost Centre,at Sewage pumping Station at ward no 16 | 58.12 |
| 3 | Construction of the Micro Compost Centre,at Komburan kadu Municipal Compost Yard | 71.56 |
| 4 | Mini Tipper (TaTa AC) -5-Nos | 28.00 |
| 5 | Battery Vechicle-16 Nos | 28.80 |
| | TOTAL | 244.60 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2299/2018/இ1)**

**தீர்மான எண். 74 நாள் 15.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

4) மேட்டூர் நகராட்சி பகுதியில் அரசாணை எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2014ன் படி பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ரூ.7308 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடைபெற்று வருகிறது. மேற்படி பாதாள சாக்கடை பணிக்காக சாலைகள் வெட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்படுவதால் சாலைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. ஏற்கனவே நகராட்சி சாலைகள் குடிநீர் திட்ட குழாய்கள் பதிப்பதற்காக வெட்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இரண்டாவது கட்டமாக பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களில் முடிவுற்ற பகுதிகளில் பழுதடைந்துள்ள கீழ்கண்ட சாலைகளை புதுப்பிக்க வேண்டி தேவையான நிதி உதவியினை TURIP 2018–19 திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கிடப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

பணியின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | சிப்பம் |
|---|---|---|---|
| 1 | மேற்கு பிரதான சாலை ஆர்.சி சர்சு ரோடு முதல் பேருந்து நிலையம் வரை தார் சாலை புதுப்பித்தல் | 68.00 | சிப்பம்– I |
| 2 | ஆர்.சி சர்சு ரோடு கிழக்கு பிரதான சாலை முதல் சர்சு வரை தார் சாலை புதுப்பித்தல் | 32.00 | |
| | மொத்தம் | 100.00 | |

அலுவலக குறிப்பு

மேற்கண்டவாறு நிதி ஒதுக்கிடப்பட்டு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்

<u>(ந.க.எண்.2650/2018/இ1)</u>

**தீர்மான எண். 75 நாள் 15.05.2018**

<u>அனுமதிக்கப்பட்டது</u>

5) இந்நகராட்சிக்குச் சொந்தமான IDSMT திட்டத்தில் கட்டப்பட்டு புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட் கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு 28.03.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.7க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.கே.ராஜ்குமார்,<br>த/பெ.எஸ்.ஆர்.கிருஷ்ணன்,<br>77/102, தங்கமாபுரிபட்டினம், | ரூ.1500/- |

| | | |
|---|---|---|
| | மேட்டூர் அணை–2. | |
| 2. | திருமதி.ஆர்.லதா,<br>க/பெ.இராஜமாணிக்கம்,<br>176, பொன்னகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.1300/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கடை எண்.7க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எஸ்.கே.ராஜ்குமார், மேட்டூர் அணை–2 என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.1500/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இக்கடைக்கு இதுவரை சுமார் 52 முறை மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், இதுவரை ஏலமோ, ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோரவில்லை. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.6232/2006/அ3)

**தீர்மான எண். 76 நாள் 15.05.2018**

அனுமதிக்கப்பட்டது

6) மேட்டூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ. 1247.19 இலட்சத்திற்கு அரசாணை எண் 67 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 20.07.2009ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு பணி முடிக்கப்பட்டு தற்பொழுது நகராட்சியின் பராமரிப்பிலும் பயன்பாட்டிலும் உள்ளது.

இத்திட்டத்தில் பல வார்டுகளில் பகிர்மான குழாய்கள் பதித்தல் பணிகள் விடுபட்டுள்ளது. இதை தொடர்ந்து, விடுபட்ட பணிகளை செய்துதர கோரி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண். 6339/2014/இ1, நாள். 02.01.2015ல் கடிதம் அனுப்பப்பட்டது.

செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் அவர்களின் கடித ந.க.எண்.கோ.மேட்டூர்/பா.சா.தி/இவஅ1/நாள்.22.04.2015 ல் விடுபட்டு போன பணிகளை செய்ய இயலாது என்றும் அசல் மதிப்பீட்டு தொகைக்கு மேல் பணிகள் மேற்கொள்ள இயலாது என்றும், அசல் மதிப்பீட்டின்படி பணி மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்துள்ளார்.

இம்மதிப்பீட்டு தொகைக்குள் செய்ய இயலாத விடுபட்ட பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய் பதித்தல், 11.50 கிலோ மீட்டர் நீளத்திற்கு செய்ய வேண்டியுள்ளது. இப்பணியினை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 155.00 இலட்சத்தினை ஈடு செய்ய நகராட்சி நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை.

எனவே, மேற்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 155.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு பெறவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6339/2018/இ1)

தீர்மான எண். 77 நாள் 15.05.2018

அனுமதிக்கப்பட்டது

7) இந்நகராட்சிக்குச் சொந்தமான IDSMT திட்டத்தில் கட்டப்பட்டு புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட் கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு 28.03.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.8க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.கே.ராஜ்குமார்,<br>த/பெ.எஸ்.ஆர்.கிருஷ்ணன்,<br>77/102, தங்கமாபுரிபட்டினம்,<br>மேட்டூர் அணை–2. | ரூ.1500/- |
| 2. | திருமதி.ஆர்.லதா,<br>க/பெ.இராஜமாணிக்கம்,<br>176, பொன்னகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.1300/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கடை எண்.8க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எஸ்.கே.ராஜ்குமார், மேட்டூர் அணை–2 என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.1500/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இக்கடைக்கு இதுவரை சுமார் 52 முறை மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், இதுவரை ஏலமோ, ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோரவில்லை. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.6235/2006/அ3)

தீர்மான எண். 78 நாள் 15.05.2018

அனுமதிக்கப்பட்டது

8) இந்நகராட்சி வாசக சாலை மற்றும் ஆணையர் குடியிருப்புக்கும் பெறப்படும் நாளிதழ்கள் கீழ்கண்ட அளவுகள் உள்ளது.

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் (ஹிந்து) | – | 38 கிலோ |
| தமிழ் நாளிதழ் (தினமணி, காலைக்கதிர் தினத்தந்தி, தினமலர், தினகரன்– 332 கிலோ | – | 332 கிலோ |

மேற்படி நாளிதழ்களை அப்புறப்படுத்த விலைப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2647/2018/பி2 )

**தீர்மான எண். 79 நாள் 15.05.2018**

அனுமதிக்கப்பட்டது

9) இந்நகராட்சி வாசக சாலை மற்றும் ஆணையர் குடியிருப்புக்கு பெறப்படும் நாளிதழ்கள் அப்புறப்படுத்த கோரிய விலைப் புள்ளிகள் கீழ்வருமாறு.

| வ.எண். | பெயர் | தமிழ் நாளிதழ் | ஆங்கில நாளிதழ் |
|---|---|---|---|
| 1 | திருமதி.சாந்தி | ரூ.7 | ரூ.9 |
| 2 | திருமதி.பட்டா | ரூ.6 | ரூ.8 |
| 3 | திருமதி.அருணா | ரூ.6 | ரூ.7 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள திருமதி.சாந்தி என்பவரின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளலாம். மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நாளிதழ்களுக்கான தொகையை பெற்றுக் கொண்டு பழைய நாளிதழ்களை அப்புறப்படுத்தலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2) மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பழைய நாளிதழ்களை அப்புறப்படுத்தியதை அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2647/2018/பி2)

**தீர்மான எண். 80 நாள் 15.05.2018**

அனுமதிக்கப்பட்டது

10) மேட்டூர் நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் வாகன எண். TN 52 W 4242 ஆயில் சர்வீஸ் மற்றும் வண்டியில் உள்ள பழுதுகளை சரி செய்யப்பட்டு S.K.S நிறுவனம் சேலம் நிறுவனத்தின் வரப்பெற்ற செலவின தொகை ரூ.40,850/– ஆகும். மேற்கண்ட செலவினத் தொகையினை S.K.S நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிந்து மேற்க்கொள்ளலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்றும் மன்ற அனுமதியினை எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கும் ரூ.40,850/—ஐ S.K.S நிறுவனத்திற்கு வழங்கியமைக்கும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1961/2018/இ1)

**தீர்மான எண். 81 நாள் 15.05.2018**

அனுமதிக்கப்பட்டது

11) மேட்டூர் நகராட்சியில் குடிநீர் விநியோகம், தனிநபர் கழிப்பிடம், தெருவிளக்குகள், பாதாள சாக்கடை திட்டம், துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புகள் மற்றும் உயிரி எரிவாயு இடம் போன்ற வளர்ச்சிப் பணிகளை தொகுத்து வழங்கியமைக்கு, உள்ளாட்சி ஊடகம் ஏப்ரல் 2018 மாத இதழில் வெளியிடப்பட்டது. உள்ளாட்சி ஊடக மாத இதழின் விளம்ர கட்டணமாக ரூ.15800/— வரப்பெற்ற பட்டியல் தொகை மேற்கண்ட மாத இதழ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிந்து மேற்க்கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்றும் மன்ற அனுமதியினை எதிர் நோக்கி உள்ளாட்சி ஊடகத்திற்கு ரூ.15800/— வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3802/2018/இ1)

**தீர்மான எண். 82 நாள் 15.05.2018**

அனுமதிக்கப்பட்டது

12) தமிழ்நாடு அரசிதழ் எண்.33 நாள்.25.01.2018—ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள்.15.03.2018 மற்றும் 28.03.2018 தேதிய கடிதத்தின் அறிவுரைகளின்படியும் இந்நகராட்சி பகுதியில் செயல்படும் அரசு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள் (சுய நிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி மன்ற தீர்மான எண்.54 நாள்.06.04.2018—ல் சொத்துவரி விதிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானம் எண்.54—ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தினத்தந்தி நாளிதழில் 13.04.2018—ல் தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிப்பது குறித்து விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி பகுதியில் இயங்கும் சம்மந்தப்பட்ட கல்வி

நிறுவனங்களிடமிருந்து ஆட்சேபனையோ மறுப்போ ஏதும் வரவில்லை. எனவே தீர்மான எண்.54–ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு சொத்துவரி விதிப்பு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1128/2018/அ1)**

**தீர்மான எண். 83 நாள் 15.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**13)** இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.15, நான்கு ரோடு பாலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள குளியலறையுடன் கூடிய கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 08.05.2018ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் | ஏலக்கேள்வியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திரு.சீனிவாசன்,<br>காவேரி நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.26,000/- |
| 2. | திரு.காளிமுத்து,<br>த/பெ.காளியப்பன்,<br>நெருஞ்சிப்பேட்டை,<br>மேட்டூர் அணை. | ரூ.25,000/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.சீனிவாசன், மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.26,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 84 நாள் 15.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் **30.05.2018** ம் தேதி பிற்பகல் **4.00** மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

1) நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2018 ஆம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 85 நாள் 30.05.2018**

**பதிவு செய்யப்பட்டது**

2) தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் சாதனை யொட்டி அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூணை திறந்து வைக்க 03.01.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடி K.பழனிசாமி அவர்களை நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பாக வரவேற்றமைக்கு தினத்தந்தி நாளிதழில் வெளியிட்டமைக்கு விளம்பரம் கட்டணம் ரூ.25704/—க்கான பட்டியல் வரப் பெற்றுள்ளது

எனவே மேற்படி பட்டியல் தொகையினை தினத்தந்தி நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ) அவர்களின் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி இதற்காகும் செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியைமக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3802/2010/இ1)**

**தீர்மான எண். 86 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

3) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா 30.09.2017 அன்று தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொது மக்கள் அறிந்து பயன் பெறும் வகையில் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் வெளியிட்டமைக்கு விளம்பர கட்டணம் ரூ.15462/—ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் கடித ந..க.எண்.3398/2017/பி1 நாள்.06.03.2018ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை மேற் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கியும் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3802/2010/இ1)**

**தீர்மான எண். 87 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**4)** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு உரிம இனங்கள், கடைகளின் வாடகைகள் ஆகியவற்றிற்கு **2007–2008** முதல் **2011–2012** முடிய செலுத்த வேண்டிய சேவை வரித்தொகைகளை செலுத்தக் கோரி சேவைவரித்துறை, சேலம் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற ORDER IN ORIGINAL 1) Sl.No.07/2010 (AC-SALEM II), Date: .08.2010, 2) Sl.No.10/2011 ST (ADC), 3) Sl.No.20/2012 (ST-ADC), Date:31.07.2012, 4) Sl.No.12/2014 (Slm II Dvn.), Date:20.05.2014. ஆகியவற்றை எதிர்த்து ஆணையர், சேவைவரித் துறை, சேலம் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மேற்காணும் மேல்முறையீட்டிற்கு தனிப்பட்ட விசாரணைக்கு ( Personal Hearing ) இந்நகராட்சியின் சார்பாக திரு.துரைராஜ், சேவை வரி சட்ட ஆலோசகர் ஆஜரானார். Order-in-Appeal No.1) 61/2017-ST, Dated:31.10.2017, A.No.76/2017-ST, Dated:31.10.2017, 2) 62/2017-ST, Dated:31.10.2017, A.No.77/2017-ST, Dated:31.10.2017, 3) 63/2017-ST, Dated:31.10.2017, A.No.78/2017-ST, Dated:31.10.2017, 4) 64/2017-ST, Dated:31.10.2017, A.No.79/2017-ST, Dated:31.10.2017 ன்படி மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டது. எனவே மேற்படி உத்தரவினை எதிர்த்து இந்நகராட்சியின் சேவை வரி சட்ட ஆலோசகர் திரு.துரைராஜ், கோவை அவர்களிடம் கலந்தாலோசிக்கப்பட்டது. மேற்படி சேவை வரி ஆலோசகர் Hon'ble Cestat, Chennai அவர்களுக்கு மேல்முறையீடு செய்ய ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி மேல்முறையீடு நிராகரிக்கப்பட்ட உத்தரவினை எதிர்த்து Hon'ble Cestat, Chennai அவர்களுக்கு மேல்முறையீடு செய்யவும், மேலும் தனிப்பட்ட விசாரணை மற்றும் இவ்வழக்கிற்கான மேல்முறையீடு தொடர்பான சட்ட ஆலோசகரின் பட்டியல்களுக்கான தொகையை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி மேல்முறையீடு நிராகரிக்கப்பட்ட உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யவும், மேலும் இவ்வழக்கிற்கான அனைத்து செலவினங்களையும் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4340/2007/அ3)**

**தீர்மான எண். 88 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

5) 1920– ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 124 D உட்பிரிவு 13–ல் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் மேட்டூர் நகராட்சி எல்லைக்குள் பணிபுரியும் அனைத்து அரசு துறை அலுவலர்கள், அரசு சார்ந்த பணியாளர்கள், ஆசிரியர்கள், தன்னிறைவுத் திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் புரிவோரிடம் வசூலிக்கப்படும் தொழில் வரியானது அரசாணை (நிலை) எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். –ன்படி ஐந்தாண்டுகளுக்கு

ஒரு முறை 25(% ) சதவீதத்திற்கு குறையாமலும், 35(% ) சதவீதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்யப்பட வேண்டும்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் நிபந்தனை எண்.276 உட்பிரிவு (2)–ல் ஒரு தனிநபரிடம் வசூலிக்கப்படும் தொழில்வரி ஆண்டிற்கு ரூ.2500/– மிகாமல் இருக்க வேண்டும் என வரையறை செய்துள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணைகளின்படியும்,. அரசு கடிதம் (நிலை) எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள்.27.04.2018–ல் உத்திரவிடப்பட்டதற்கிணங்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/R1 நாள்.21.05.2018–ல் தெரிவித்துள்ளதற்கிணங்கவும் இந்நகராட்சியில் 01.10.2018 (2018–2019 இரண்டாம் அரையாண்டு) முதல் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி உயர்வு செய்து நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 2018–2019 முதலாம் அரையாண்டு | 2018–2019 இரண்டாம் அரையாண்டு |
|---|---|---|---|
| 1 | ரூ.21,000/– வரை பெறுவோர் | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21,001/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.125/– | ரூ.160/– |
| 3 | ரூ.31,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.320/– | ரூ.400/– |
| 4 | ரூ.45,001 /– முதல் ரூ.60,000/– வரை | ரூ.625/– | ரூ.785/– |
| 5 | ரூ.60,001 முதல் ரூ.75,000/– வரை | ரூ.940/– | ரூ.1175/– |
| 6 | ரூ.75,001/– முதல் அதற்குமேல் | ரூ.1190/– | ரூ.1250/– |

அலுவலகக் குறிப்பு :-

1) அரசாணையின்படி 25(%) சதவீதத்திற்கு குறையாமல் உயர்வு செய்யப்படுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்
2) வரிசை எண்.6–ல் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்குட்பட்டு உட்சபட்ச தொகையினை ரூ.1250/–ஐ உறுதி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2882/2018/அ3 )**

**தீர்மான எண். 89 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**6)** மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண். TN 52 W 5972 –ன் அனைத்து டயர்கள் மற்றும் டியூப்கள் புதியதாக மாற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.68300/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2602/2018/இ1 )**

**தீர்மான எண். 90 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

7) பள்ளி பாளையம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.பி.வெங்கடேஸ்வரன் என்பவர், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக, மேட்டூர் நகராட்சிக்கு துப்புரவு பணியாளராக பணியிட மாறுதலில் ஈர்த்துக் கொள்ளுவது குறித்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் (ந.க.எண்.4953/17/அ4 நாள்.10.01.2018) மன்றத்தின் பார்வைக்கும், பரிசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பரிசிலித்து முடிவு எடுக்கலாம்.

(ந.க.எண்.250/2018/எச்1)

**தீர்மான எண். 91 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

8) ஒசூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எ.சூர்யா என்பவர், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக, மேட்டூர் நகராட்சிக்கு துப்புரவு பணியாளராக பணியிட மாறுதலில் ஈர்த்துக் கொள்ளுவது குறித்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் (ந.க.எண்.1706/18/அ4 நாள்.09.05.2018) மன்றத்தின் பார்வைக்கும், பரிசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பரிசிலித்து முடிவு எடுக்கலாம்.

(ந.க.எண்.2817/2018/எச்1)

**தீர்மான எண். 92 நாள் 30.05.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி